## சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

# தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம்!

### (மூன்றாவது பட்டியல்)

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| சட்டமன்றத் தொகுதி | - பார்வையாளர் |
|---|---|
| தூத்துக்குடி, கோவில்பட்டி | – பொன்.முத்துராமலிங்கம் |
| திருக்கோயிலூர் | – சிவ.ஜெயராஜ் |
| ஜெயங்கொண்டம் | – கன்னிகை ஸ்டாலின் |
| பட்டுக்கோட்டை | – என்.வி.காமராஜ் |
| பேராவூரணி | – ஏனாதி பாலு |
| பாபநாசம் | – ரங்கசாமி, சாகுல்அமீது |
| பவானி | – கோ.வெ.குமணன் |
| திரு வி.க.நகர் | – பிரியா ராஜன் |
| செஞ்சி | – டி.ஏ.மணிவண்ணன் |
| மன்னார்குடி | – வழக்கறிஞர் கண்ணதாசன் |
| இராயபுரம் | – காசிமுத்துமாணிக்கம் |
| சேலம் தெற்கு | – சரவணன் (நெசவாளர் அணி) |
| கடையநல்லூர் | – மாலைராஜா |

குறிப்பு: ஏற்கனவே தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 02.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## 2026–திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி

# மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளர் வி.ஜி.இராஜேந்திரன் வாக்குசேகரிப்பு சுற்றுப்பயண விவரம்!



### கடம்பத்தூர் ஒன்றியம் - 03.04.2026 - வெள்ளிக்கிழமை

| இடம் | வாக்குச் சாவடி எண்கள் | நேரம் (காலை) |
|---|---|---|
| கீழ்நல்லாத்தூர் | 322, 323, 324 | 7.30 |
| பல்லவ திருநகர் | | 8.00 |
| எம்.ஜி.ஆர். நகர், மேல்நல்லாத்தூர் | 318, 319, 320 | 8.30 |
| மேல்நல்லாத்தூர் கிராமம் | | 8.45 |
| ஊராட்சி மன்ற அலுவலகம், மேல்நல்லாத்தூர் | | 9.00 |
| கோமதி நகர், போளிவாக்கம் | 258, 259, 260, 261, 262, 263 | 9.30 |
| எஸ்.என்.புரம், போளிவாக்கம் | | 9.45 |
| விஜயா நகர், போளிவாக்கம் | | 10.00 |
| விக்னேஷ்வரா நகர், போளிவாக்கம் | | 10.15 |
| மேட்டு தெரு, போளிவாக்கம் | | 10.30 |
| மாரியம்மன் கோயில் தெரு, போளிவாக்கம் | | 10.45 |
| ஆதிதிராவிடர் குடியிருப்பு, போளிவாக்கம் | | 11.00 |
| இராமர் கோயில் தெரு. பாக்குபேட்டை | | 11.15 |
| ஆதிதிராவிடர் குடியிருப்பு, பாக்குப்பேட்டை | | 11.30 |
| பெருமாள் கோயில் தெரு, வலசைவெட்டிக்காடு | 289 | நண்பகல் 12.00 |
| இலுப்பூர் கிராமம் | 290 | நண்பகல் 12.15 |
| ஆதிதிராவிடர் குடியிருப்பு, இலுப்பூர் | | நண்பகல் 12.30 |
| நியாய விலைக்கடை அருகில், கொப்பூர் | 283, 284 | மாலை 4.00 மணி |
| ஆதிதிராவிடர் குடியிருப்பு, கொப்பூர் | | மாலை4.15 மணி |
| ஆதிதிராவிடர் குடியிருப்பு, புதுவள்ளூர் | 285 | மாலை 4.30 மணி |
| பெருமாள் கோவில் தெரு, புதுவள்ளூர் கிராமம். | | மாலை 4.45 மணி |
| கூட்டு சாலை, பாப்பரம்பாக்கம் | 287 | மாலை 5.00 மணி |
| மங்காத்தாகுளம், பாப்பரம்பாக்கம் | | மாலை 5.15 மணி |
| ஆதிதிராவிடர் குடியிருப்பு, நயப்பாக்கம் | 286 | மாலை 5.30 மணி |
| ஆதிதிராவிடர் குடியிருப்பு, பாப்பரம்பாக்கம் | 287 | மாலை 5.45 மணி |
| பாப்பரம்பாக்கம் கிராமம் | | மாலை 6.00 மணி |
| ஆதிதிராவிடர் குடியிருப்பு, வெள்ளேரிதாங்கல் | 288 | மாலை 6.30 மணி |
| வெள்ளேரிதாங்கல் கிராமம் | | மாலை 6.45 மணி |
| காருணியா நகர் | 332 | மாலை 7.00 மணி |
| கன்னியம்மன் நகர் | | மாலை 7.15 மணி |
| வெங்கத்தூர் கிராமம் | | மாலை 7.30 மணி |
| ஆதிதிராவிடர் குடியிருப்பு, வெங்கத்தூர் | 331 | மாலை 7.45 மணி |

**திருவள்ளூர் சட்டமன்ற தேர்தல் பணிக் குழு**

## 131வது வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

### மு.ம.செந்தில்குமார் அறிக்கை!

சென்னை, ஏப்.3–

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர்நகர் கிழக்கு பகுதி 131வது வட்ட தி.மு.க ஆலோசனை கூட்டம் இன்று (03.04.2026 வெள்ளிக்கிழமை) மாலை 06.00 மணிக்கு வட்ட அவை தலைவர் வி.டி.செல்வம் தலைமையில் வட்ட கழக அலுவலகம் கலைஞர் பொதுநல மன்றத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் தியாகராயர்நகர் மேற்குப் பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., கிழக்கு பகுதி பொறுப்பாளர் கோ.சு.மணி, பகுதி அவைதலைவர் மு.மணிவண்ணன், 131வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி மணிவண்ணன். எம்.சி., ஆகியோர் கலந்துக்கொண்டு ஆலோசனைகளை வழங்குகிறார்கள்.

ஆகையால் மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், பாகப் பொறுப்பாளர்கள், மகளிர் அணி, மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1. தியாகராயர் நகர் தொகுதி வெற்றி வேட்பாளர் ராஜா அன்பழகன் அவர்கள் வாக்கு சேகரிப்பு. 2. கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு மு.ம.செந்தில் குமார் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## 122வது வட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

### எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார் அறிவிப்பு!

சென்னை, ஏப். 3–

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்குப் பகுதி 122–வது வட்டக் கழக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் மயிலை மேற்குப் பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. தலைமையில், வட்டச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார் எனது முன்னிலையில் நாளை சனிக்கிழமை, 04.04.2026, மாலை 7 மணியளவில் ஆழ்வார்பேட்டையில் உள்ள வட்டச் செயலாளர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் வெற்றி வேட்பாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. மற்றும் தொகுதி பொறுப்பாளர் கோவி. லெனின் ஆகியோர் ஆலோசனை வழங்குகிறார்கள்.

எனவே நமது வட்டக் கழகத்தைச் சார்ந்த மாநில, மாவட்ட, பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், அணிகளைச் சார்ந்த அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாக முகவர்கள்(BLA2), அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு 122வது வட்ட செயலாளர் எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மதுரவாயல் 147 வது வட்டத்தில் ரமணி மாதவன் எம்.சி. வாக்கு சேகரிப்பு!

### மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் அறிக்கை!

சென்னை, ஏப். 03 –

மதுரவாயல் 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்டம், சொக்கநாத நகர் 3 வது தெருவில், மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, பகுதிக் கழகச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் அறிவுறுத்தலின்படி, இன்று (03.04.2026 – வெள்ளிக்கிழமை) காலை 6:30 மணியளவில், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் காரம்பாக்கம் க.கணபதி ஆதரித்து 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் பிரச்சாரம் துவங்கி வைக்கிறார்.

பிரச்சாரத்தில் வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு என்றும் ‘தளபதி’யின் கோட்டை!



எடப்பாடி பழனிசாமி “விவசாயி முதல்வராவது அ.தி.மு.க.வில் தான்” என்கிறார்.. விவசாயி தான் முதல்வராக வேண்டுமென்றால் அறிஞர் அண்ணாவும், எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் முதல்வரானது தவறு என்று எடப்பாடி கூறுகிறாரா?

ஸ்டாலின் கூப்பன் அறிவிப்பு கமிஷனுக்குத் தானாம், மக்கள் ஏமாற மாட்டார்களாம். எடப்பாடி கூறுகிறார். 20 ரூபாய் கூப்பனைக் கொடுத்து ஏமாற்ற இது ஆர்.கே.நகர் தேர்தலும் அல்ல, கூப்பனைக் கொடுத்தவர் உமது இன்றைய நண்பர் தினகரனும் அல்ல.

நீர் ஆட்சி செய்த போது கொரோனாவுக்காக கொடுக்க வேண்டிய 5,000-த்தில் 1,000 மட்டுமே கொடுத்தீர். மீதி 4,000/த்தை கொடுத்தவர் தளபதி. உமக்காக 2 கோடி ரேஷன் கார்டுகளுக்கு தலா 4000 வீதம் 8,000 கோடி கொடுத்தவருக்கு 8000 ரூபாய்க்கு கூப்பன் கொடுக்கத் தெரியாதா.

சொல் உயர்ந்ததாக இருந்தாலும், சொல்கின்றவர் யார் என்பதே முக்கியம்.

கடந்த தேர்தலில் மகளிர் உரிமைத்தொகை 1,000 ரூபாய் தருவதாக தளபதி கூறினார். ஆனால் எடப்பாடி 1500 ரூபாய் தருவதாக கூறினார். தளபதி சொல்லே மந்திரம் என தளபதியை மக்கள் நம்பினார்கள். அதைப்போலத்தான் 8000 ரூபாய் கூப்பனையும் நம்புவார்கள்.

அ.தி.மு.க.வில் உழைத்தால் உயர்ந்துவிடலாம் என எடப்பாடி கூறுகிறார். உயர்வு வந்தால் ஏன் தி.மு.க.விற்கும், த.வெ.கா.வுக்கும் அ.தி.மு.க.வினர் ஓடுகின்றனர். கட்சி வேட்டி கூட கட்டக்கூடாது எனக் கோர்ட்டில் தடை வாங்கும் அவலம் தி.மு.க.வில் இல்லை.

எடப்பாடியும், தினகரனும் இன்று ஒன்றுசேர்ந்து சிரிக்கிறார்கள். உங்கள் சண்டையில் 18 பேருக்கு எம்.எல்.ஏ. பதவி இரண்டு ஆண்டுகள் போனது. இந்த 18 பேரின் குடும்பங்களுக்கு குறைந்தபட்சம் இரண்டு ஆண்டு சம்பளமாவது கொடுத்தீர்களா? கொடுப்பீர்களா? அவர்களுக்கு என்ன பதில்?

எடப்பாடி உழைத்ததற்காக முதல்வர் ஆனவர் இல்லை. தரையில் உருண்டு சசிகலா காலைப் பிடித்ததற்காக முதல்வர் ஆனவர்.

இன்று நீர் தினகரனுடன் சேர்க்கின்ற அளவு தன்னை வளர்த்துக் கொள்ள காரணமாக இருந்த தினகரனின் சின்னம்மா என்னவானார்கள்?

**கொரோனா நேரத்தில் எடப்பாடி உழைத்தாராம். கிட்ஸ் வாங்கியதில் ஊழல், பிளீச்சிங் பவுடரில் ஊழல், முகம் உறையில் ஊழல், கை உறையில் ஊழல், வாங்கிய தடுப்பூசிகளை திருப்பிக் கொடுங்கள் என டெல்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதையும்,**

**கொரோனாவை ஒழிக்க பிரதமருடன் அ.தி.மு.க.வினர் மணி விளக்கு ஏற்றியதையும் மறைத்துவிட்டு நம்மிடம் அடித்ததையும் பேசுகிறார்கள்.**

**“ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிடம் வேலை வாங்குவதற்கு தகுதி வேண்டும் அந்தத் தகுதி தளபதியிடம் இல்லை” – என்கிறார் எடப்பாடி.**

**ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை வைத்துக்கொண்டு தான் “காலை உணவு திட்டம், தாயுமானவர் திட்டம், கருப்பையில் வாயிலேயே ஊசி போட்டிடும் திட்டம்” என தினசரி சூரியன் வருகிறதோ இல்லையோ, புதிய புதிய திட்டங்கள் கொண்டு வந்தார் தளபதி.**

2016- 2021-ல் 18 எம்.எல்.ஏ. களை உறுப்பினர் பொறுப்பில் இருந்து நீக்கி, எடப்பாடி ஆட்சியை கவிழவிடாமல் தடுத்த சட்டப்பேரவைத் தலைவர் தனபாலின் நிலை அ.தி.மு.க.வில் இப்போது என்ன?

அனைத்து ஜாதியினரும் ஒதுக்கி வைத்த, தாழ்த்தப்பட்ட சாதியினரான தனபாலை கண்டு, அனைத்து சாதியினரும் எழுந்து நிற்க வாய்ப்பு வழங்கியவர் ஜெயலலிதா என்கிறீர்களே - இப்போது ஜெயலலிதா வழங்கிய வாய்ப்பை நீங்கள் எடுக்கலாமா? அவர் ஆத்மா இருந்தால் உங்களை மன்னிக்குமா?

அன்று ஜெயலலிதா, விமானத்தில் ஏறவிடாமல், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்த ஒன்றிய அமைச்சர் அருணாசலத்தைக் கழட்டிவிட்டார். இன்று சட்டப் பேரவைத் தலைவர் சபாநாயகர் என உயர்ந்த பொறுப்பில் அமர வைத்த தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த தனபாலை எடப்பாடி கழட்டிவிட்டார்.


முன்னாள் பேரவைத் தலைவர் காளிமுத்துவின் மறு தோற்றமாய், இலக்கிய நடையில் பேசி உயர்ந்த முன்னாள் அமைச்சர் வைகைச் செல்வனுக்கு சீட்டு இல்லை. முத்தரையர் சமுதாயத்தினரை அவமதிக்கும் வகையில் முத்தரையர் சமுதாய சிவபதி, வளர்மதிக்கு சீட்டு இல்லை. ‘கொண்டா கோடி இல்லை எனில், போய் விடு, தேர்தல் களத்தை விட்டு ஓடி’ என தாடி வைக்காத மோடியாக மிரட்டுகிறார் எடப்பாடி.

‘ஜெயலலிதாவின் விரல்களில் “ஈ” மொய்த்தால் எங்கள் விழிகளில் முள் குத்தியது போல துடிப்போம்’ என்றார் காளிமுத்து. ஆனால் இன்று ஐதராபாத்தில் ஜெயலலிதா வாழ்ந்த அவருக்குச் சொந்தமான கட்டிடத்திற்கு 82.91 லட்சம் சொத்துவரி பாக்கி என ஐதராபாத் மாநகராட்சி அதிகாரிகள் கட்டிடத்திற்கு சீல் வைத்து விட்டார்கள். அந்தத் தொகையை அ.தி.மு.க. வங்கி இருப்பு கணக்கிலிருந்து கட்டாமல் எடப்பாடி வேடிக்கை பார்ப்பதுதான் விசுவாசமா?

விஜய் ஏன்டா நம்பிக்கை இல்லாமல் இரண்டு தொகுதிகளில் போட்டியிடுகிறார் என்று கேட்டால், உங்கள் இளைய தளபதி, உதயநிதி மட்டும் இரண்டு தொகுதியில் நிற்கலாமா என கேட்கும் த.வெ.க. நிர்வாகிகளை தற்குறி என்று கூறாது வேறு எப்படி அழைப்பது?

உதயநிதி, “சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி” என இரண்டு தொகுதியில் நிற்கிறாராம். என்ன அறிவு? அது ஒரே தொகுதி என்பது கூட தெரியவில்லை.

தளபதியை “முன்னாள் முதல்வர்” என ஆதவ் கூறுகிறார். தேர்தல் முடிந்து, வாக்கு எண்ணிக்கை முடிந்து தான் புது முதல்வர். அந்த நிமிஷம் வரை இப்போது முதல்வராக இருப்பவர்கள் “காபந்து முதல்வர்” என்று தான் அழைக்கப்படுவார்.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

200 போலீசாரை இறக்கி, பக்காவாய் பாதுகாப்பு கொடுத்தும் ஏன் வில்லிவாக்கம் கூட்டத்தை ரத்து செய்தார் விஜய். எதிர்பார்த்த கூட்டம் இல்லை. ஏசி இல்லாமல் வெயிலில் விஜய்க்கு வாக்கு கேட்க விருப்பம் இல்லை.

இதில் எதற்கு தி.மு.க. அதிகாரி என திட்டுவது. நீ என்ன மூடனா, முட்டாளா.

தேர்தல் விதி அமலுக்கு வந்த பின் ஒன்றிய அரசின் கைப்பாவையாக செயல்படும் தேர்தல் ஆணையத்தைத் தானே திட்ட வேண்டும். இதில் எங்கே வந்தது தி.மு.க.? பா.ஜ.க.வை திட்டி பழக்கம் இல்லை. அதனால் திட்டவில்லை.

விஜய் அறிவித்த வேட்பாளர்கள் பாதிக்கும் மேற்பட்டோர் ரசிகர் மன்றத்திற்கே தொடர்பு இல்லாதவர்கள். விஜய் கட்சியினர் மொத்தம் 133 மாவட்ட கழக செயலாளர்களில், 61 மாவட்ட கழக செயலாளர்களுக்கு இந்த முறை சீட்டு இல்லை.

109 பேர் மாற்றுக் கட்சியினர். தேர்தலுக்காக சேர்ந்தவர்கள்.

நேர்காணல் இல்லாமல், வேட்பாளர் தேர்வு நடத்தாமல் நேரடி நியமனம்.

இந்த முறை தேர்தல் சம்பந்தமான கூட்டங்களுக்கும் பிரசாரங்களுக்கும் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பித்த இடைவெளி 48 மணி நேரம் வேண்டும் என்பது தேர்தல் விதி. அது கூடத் தெரியாதவன் சட்டமன்ற உறுப்பினராக ஆசைப்படலாமா?

**அருகம் புல்லை வீழ்த்தத் தெரியாதவன், ஆலமரத்தை வீழ்த்தப் புறப்பட்டானாம், கூட்டத்திற்கு அனுமதி பெறத் தெரியாதவன் ஒன்றிய உள்துறை செயலாளருக்கும், மணிப்பூர் கவர்னருக்கும் வித்தியாசம் தெரியாதவன் கோட்டைக்குப் போக ஆசைப்பட்டானாம், ஆசைப்பட்டாலும் தமிழ்நாட்டு மக்களிடம் எடுபடாது.**

தமிழ்நாடு என்றும் தளபதியின் கோட்டை
தளபதி இன்று செயிண்ட் ஜார்ஜ் கோட்டை
நாளை செங்கோட்டை!



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்ட தி.மு.க. சார்பில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் 147 வது வட்டத்தின் பணிமனை வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தலைமையில் வளசரவாக்கம், 11 வது மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. முன்னிலையில் வெற்றி வேட்பாளர் காரம்பாக்கம் க.கணபதி பணிமனையை திறந்து வைத்தார். இதில் 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் மற்றும் வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் நிர்வாகிகள், மகளிர் அணியினர், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.



பெரம்பூர் சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் ஆர்.டி.சேகரை ஆதரித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் இரா.கிரிராஜன் எம்.பி. ஆலோசனை வழங்கினார். உடன் கன்னிகை ஜி.ஸ்டாலின் கூட்டணி கட்சிகளின்மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.